# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : CC.No. 224/2022**

**Prosecution witness : அ.சா. 12** **Date : 11.01.2024**

| | |
|---|---|
| **Name : மணிமாறன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

1) நான் தற்பொழுது குறிஞ்சி மருத்துவமனையில் எலும்பியல் துறையில் தலைமை மருத்துவராக உள்ளேன். கடந்த 20.09.2020 ம் தேதி மதியம் 02.44 மணியளவில் நான் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது, திரு.நவீன் வயது 21 த/பெ கோபால் என்பவரை அவருடைய உறவினர்கள் சிசிச்சைக்காக அழைத்துவந்தார்.

2) அவர் என்னிடம் கடந்த 20.09.2020 –ம் தேதி இரண்டு சக்கர வாகனத்தின் மீது ஆட்டோ ஒன்று மோதியதால் விபத்து ஏற்பட்டது என்று கூறினார். அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள்

1) இடது தோள்பட்டை வீக்கமாக காணப்பட்டது.

2) இடது கால் பகுதி வீக்கமாக காணப்பட்டது.

மேலும் அவருக்கு சிகிச்சை அளித்து அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளி பிரிவில் அனுமதித்து சிகிச்சை அளிக்கப்பட்டது. அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன். நவீன் **என்பவருடைய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.8 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

<u>இல்லை.</u>

**ஓம்/– தே.மயில்சாமி,**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**மேட்டூர்.**